**செய்தி வெளியீடு எண்: 818** **நாள்: 21.11.2019**

## செய்தி வெளியீடு

ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பணிபுரிய ITI அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் 3 வருட பணி அனுபவம் பெற்ற Electrical Technicians / Electrical OH Lineman மற்றும் Electricians தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பணி அனுபவத்திற்கேற்ப ரூ,24,000/- முதல் ரூ.37,000/- வரை மாத ஊதியம் வழங்குவதுடன் விசா மற்றும் ஓமன் நாட்டின் சட்டதிட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வெளிநாட்டு வேலையளிப்போரால் வழங்கப்படும்.

இப்பணிக்கான நேர்முகத் தேர்வு 14.12.2019 மற்றும் 15.12.2019 காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600 032ல் நடைபெற உள்ளது. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம், அசல் (Original) கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், பாஸ்போர்ட் மற்றும் நகல்கள், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் வாயிலாகவும் www.omcmanpower.com மற்றும் 044-22505886 / 8220634389 / 9566239685 / 22502267 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான வெளி விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண். RC.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**